**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 188/2017**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW10<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Venkatesan |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 4th day of April, 2025.

**(Accused produced on P.T. Warrant)**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u> :

**<u>முதல் விசாரணை</u>** :

நான் தற்போது வில்லிவாக்கம், வள்ளியம்மை நகரில் வசித்து வருகிறேன். 11/09/2016 அன்று சுறா (எ) முருகன் என்பவரை பொத்தூரில் வெட்டிவிட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். நான் மறுநாள் சுப்பிரமணியுடன் பொத்தூருக்கு சென்றோம்.

பொத்தூருக்கு மேற்படி இறப்பிற்கு சென்றோம். பொத்தூர் பக்கத்தில் உள்ள பஸ் ஸ்டான்டுக்கு அருகில் சென்றோம். சுப்பிரமணியையும் என்னையும் விசாரித்தார்கள். சுறா என்பவரை வெட்டியவர்கள் இவர்கள் தானா என்று கேட்டார்கள். அவர்கள் பெயர் மணிகண்டன், ராஜேஷ் ஆகும். எங்களிடம் போலீசார் கையொப்பம் வாங்கினார்கள். மேற்படி நபர்களிடமிருந்து XL வண்டி மற்றும் அவர்கள் அணிந்திருந்து ஆடைகளை போலீசார் கைப்பற்றினார்கள். மேற்படி பொருட்களை கைப்பற்றியதற்காக எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் இரண்டு கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் எதிரி யோகேஸ்வரன் (இறந்துவிட்டார்) மற்றும் எதிரி மணிகண்டன், என்பவர்களது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பங்கள் என்னுடையது தான். கைபற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எதிரி யோகேஸ்வரனிடமிருந்து கைப்பற்றிய கத்தி மற்றும் முழுக்கை சட்டை கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி மணிவண்ணனிடமிருந்து கைப்பற்றிய கத்தி மற்றும் இரத்த கறைபடிந்த சிவப்பு முழுக்கை சட்டை, XL Super TN 02 BD 0741 என்ற இருசக்கர வாகனம் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள். என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த ஆஜர் எதிரி இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அவருடைய பெயர் எனக்கு சரியாக நினைவில்லை.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :

இறந்த நபர் சுறா என்பவருக்கு நான் சொந்தக்காரர் என்றால் சரிதான். போலீசார் என்னை காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் டைப் அடித்த பேப்பரில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதை நான் முதல் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். சுறா என்பவரது பிரேதத்தை வாங்க நான் மேற்படி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் முதல்

விசாரணையில் கூறியது போல் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிடவில்லை என்றாலும் இறந்தவரின் பிரேதத்தை பெறுவதற்காக கையொப்பமிட்டேன் என்றால் சரிதான்.

**இந்நிலையில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் 12/09/2017ம் தேதி மதியம் நானும், சுப்பிரமணியும் கொள்ளுமேடு பஸ் ஸ்டான்ட் அருகில் வரும்பொழுது ஆஜர் எதிரி மணிகண்டனும், ராஜேஷூம் போலீசார் முன்னிலையில் 11/09/2017 அன்று சுறா (எ) முருகனை வெட்டி கொலை செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற இடத்தில் கணிணியில் டைப் செய்து பிரிண்ட் எடுத்தார் என்றும் அதில் நானும் சுப்பிரமணியும் கையொப்பம் செய்தேம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் XL Super, கத்தி, எதிரிகள் அணிந்திருந்து இரத்த கறைபடிந்த ஆடைகள் ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் போலீசார் கைப்பற்றியதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் மாற்றி தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.